**கவனிக்க.**– 2006.09.08 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1463 - 2006 සැප්තැම්බර් 15 වැනි සිකුරාදා - 2006.09.15

1463 ஆம் இலக்கம் – 2006 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | – | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 860 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | – | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | – |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 854 | ஏல விற்பனைகள் | 861 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 855 | நானாவித அறிவித்தல்கள் | – |


**கவனிக்க.**–(i) கொடுப்பனவு உபாயங்களின் மோசடிகள் சட்டமூலம் 2006, யூன் 16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்பு) சட்டமூலம் 2006, யூன் 16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(iii) தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் சட்டமூலம் 2006, யூன் 16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

வியாழக்கிழமை **வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, செத்தெம்பர் 22 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, செத்தெம்பர் 08 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## நீதிமன்ற சான்றுப் பொருட்களின் ஏல விற்பனை

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட உரிமை கோரப்படாத கீழ் குறிப்பிடப்படும் பொருட்கள் 30.09.2006 அன்று காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை இந்நீதிமன்ற வளவில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்க்கப்படும்.

1. இப்பொருட்களுக்கான உரிமை கோருபவர்கள் எவருமிருந்தால் ஏலவிற்பனை தொடங்குவதற்கு முன்னர் தங்களது உரிமைக் கோரிக்கைகளை முன் வைத்தல் வேண்டும்.

2. பொதுமக்கள் எவரும் இந்நீதிமன்ற பதிவாளரின் அனுமதியுடன் குறிப்பிடப்பட்ட பொருட்களை ஏலவிற்பனை தொடங்குவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்னர் பார்வையிடலாம்.

3. இப்பொருட்களில் எவற்றையேனும் விலைகள் ஒவ்வாத பட்சத்தில் விற்பனையிலிருந்து மீளபெறுவதற்கு இந்நீதிமன்றத்திற்கு உரிமை உண்டு.

4. பொருட்களை கொள்வனவு செய்பவர்கள் உடனடியாக பணத்தைச் செலுத்தி உரிய பொருட்களை நீதிமன்ற வளவிலிருந்து அப்புறப்படுத்தல் வேண்டும். சகல கொடுப்பனவுகளும் பணமாகச் செலுத்துதல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

5. பொருட்களை விலை வைத்து வாங்குவோர் தமது அடையாளத் தினை உறுதிப்படுத்துவதற்கு தேசிய ஆளடையாள அட்டையை கொண்டுவருதல் வேண்டும்.

ஜனாப் எம். எச். எம். அஜ்மீர்,
மேலதிக மாவட்ட நீதிபதியும் நீதவானும்.
மட்டக்களப்பு.

| தொடர் இல. | வழக்கு இல. | விற்பனைக்கான பொருட்களின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | AR-64/06 (V) | 1. துவிச்சக்கர வண்டி (இல. தெளிவில்லை) | 1 |
| | | 2. துவிச்சக்கர வண்டி இல. PCI 65605 | 1 |
| 2. | AR-65/06 (V) | 1. 21" தொலைக்காட்சிப் பெட்டி (சேதமுற்றது) | 1 |
| | | 2. வானொலிப் பெட்டி (சேதமுற்றது) | 1 |
| | | 3. CD பிளேயர் (சேதமுற்றது) | 1 |
| | | 4. சொனி பொக்ஸ் (சேதமுற்றது) | 2 |
| 3. | AR-67/06 (V) | துவிச்சக்கர வண்டி (இல. 69280635) | 1 |
| 4. | AR-68/06 (V) | கோடரி | 1 |
| 5. | AR-183/06 | துவிச்சக்கர வண்டி (இல. 911869) | 1 |
| 6. | AR-348/05 | 1. தொலைக்காட்சிப் பெட்டி (சுனாமியால் சேதமுற்றது) | 4 |
| | | 2. குளிர்சாதனப் பெட்டி (முற்றாக சேதமுற்றது) | 1 |
| 7. | AR-349/05 | உரிதிப்பாகங்கள் இல்லாத நிலையில் குளர்சாதனப்பெட்டி | 1 |
| 8. | AR-350/05 | தொலைக்காட்சிப் பெட்டி (சுனாமியால் சேதமுற்றது) | 5 |
| 9. | AR-835/05 | கணனி மொனிற்றர் (சுனாமியால் சேதமுற்றது) | 1 |
| 10. | AR-968/05 | 1. தொலைக்காட்சிப் பெட்டி (சுனாமியால் சேதமுற்றது) | 3 |
| | | 2. கணனி மொனிற்றர் (சுனாமியால் சேதமுற்றது) | 2 |
| | | 3. குளிர்சாதனப் பெட்டி (முற்றாக சேதமுற்றது) | 2 |
| 11. | AR-1109/05 | நீர்ப்பம்பி (சேதமுற்றது) | 1 |
| 12. | AR-1470/05 | ஜிப்சி 20 கரட், 0.5 மில்லி கிராம் | 1 |
| 13. | AR-1918/05 | பைபர் வோட் (பழுதடைந்தது) | 1 |
| 14. | AR-1919/05 | 1. பைபர் வோட் (பழுதடைந்தது) | 1 |
| | | 2. வோட் எஞ்ஜின் (பழுதடைந்தது) | 1 |
| 15. | AR-1998/05 | பஜாச் இன கலிபர் மோட்டார் சைக்கிள் இயந்திர இல. DBMBHL 20375 அடிச்சட்டக இல. DDFBHL 58930 | 1 |
| 16. | AR-2035/05 | 1. காப்பு | 1 சோடி |
| | | காதணி | 1 சோடி |
| | | பெண்டன் | 1 |
| | | செயின் (20 கரட் 31.5 கிறாம்ஸ்) | 1 |
| | | மோதிரம் | 1 |
| | | 2. தாலி (20 கரட் 4.5 கிறாம்ஸ்) | |
| | | 3. ஜிப்சி (20 கரட் 2.3 கிறாம்ஸ்) | 1 சோடி |
| | | 4. செயின் காதணி (20 கரட் 20 கிறாம்ஸ்) | |
| | | 5. தாலிக்கொடி (20 கரட் 39 கிறாம்ஸ்) | |
| | | 6. காப்பு (16 கரட் 13.4 கிறாம்ஸ்) | 1 |
| | | 7. செயின் (16 கரட் 2.5 கிறாம்ஸ்) | 1 |
| | | 8. ஜிப்சி (18 கரட் 03 கிறாம்ஸ்) | 1 சோடி |
| | | 9. மோதிரம் (22 கரட் 6.3 கிறாம்ஸ்) | 1 |
| | | 10. தாலிக்கொடி (20 கரட் 40 கிறாம்ஸ்) | |
| | | 11. காப்பு | 3 |
| | | மோதிரம் (20 கரட் 24.3 கிறாம்ஸ்) | 2 |
| | | 12. தாலிக்கொடி (20 கரட் 24 கிறாம்ஸ்) | 1 |
| | | 13. காதணி (20 கரட் 1.5 கிறாம்ஸ்) | 1 |
| 17. | AR-2067/05 | துவிச்சக்கர வண்டி (இல. A 3083) | 1 |
| 18. | AR-2068/05 | துவிச்சக்கர வண்டி இல. H 5767265 | 1 |
| 19. | AR-2144/05 | துவிச்சக்கர வண்டி (இல. 55981966) | 1 |

| தொடர் இல. | வழக்கு இல. | விற்பனைக்கான பொருட்களின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 20. | AR-2145/05 | துவிச்சக்கர வண்டி (இல. 69270106) | 1 |
| 21. | AR-2148/05 | துவிச்சக்கர வண்டி (இல. 24451397) | 1 |
| 22. | AR-2149/05 | துவிச்சக்கர வண்டி (இல. A 49628) | 1 |
| 23. | AR-2150/05 | துவிச்சக்கர வண்டி (இல. M 839313) | 1 |
| 24. | AR-2163/05 | ஹொண்டா இன சுப்பர் கப்-70 மோட்டார் சைக்கிள் | 1 |
| | | இயந்திர இல. C 70E6573412 | |
| | | அடிச்சட்டக இல. C 706329495 | |
| 25. | B/269/03 (V) | 1. யமகா இன அவுட் போட் எஞ்ஜின் | 1 |
| | | 2. சுசுக்கி இன அவுட் போட் எஞ்ஜின் | 1 |
| 26. | 2697/PC/03 | துவிச்சக்கர வண்டி (இல. PCI 8588AA) | 1 |
| 27. | 4215/PC/04 (V) | பைபர் தோணி | 1 |
| 28. | 4537MT/05 (V) | துவிச்சக்கர வண்டி (இல. 24013833) | 1 |
| 29. | 38870/PC/00 | துவிச்சக்கர வண்டி (இல. 55991012 | 1 |
| 30. | 54731/PC/03 | நீர்ப்பம்பி | 1 |
| 31. | 61282/PC/05 | 1. பனசோனிக் 14" TV | 1 |
| | | 2. பனசோனிக் VCD பிளேயர் | 1 |
| 32. | 63476/PC/05 | 1. சிறிய பெண்டன் (16 கரட் 1.4 கிறாம்ஸ்) | 3 |
| | | 2. சிறிய பெண்டன் (18 கரட் 0.5 கிறாம்ஸ்) | 1 |
| 33. | 66740/ODD/05 | துவிச்சக்கர வண்டி (இல. 139116) | 1 |
| 34. | 69417/ODD/06 | துவிச்சக்கர வண்டி (இல. DCD 7421) | 1 |
| 35. | 69465/F/06 | 1. மண் வெட்டி | 1 |
| | | 2. சவள் | 3 |
| | | 3. பிக்காஸ் | 1 |
| 36. | 69898/F/06 | சவள் | 5 |
| 37. | 69899/F/06 | 1.சவள் | 4 |
| | | 2. பிக்காஸ் | 2 |
| 38. | வழ. இல. இல்லை | ஒலிபெருக்கி இல்லாத பொக்ஸ் ((Box) சுமார் 2 1/2' உயரம், 1 1/2' அகலம் உடையது | 2 |
| 39. | வழ. இல. இல்லை | அம்பிலிபயர் | 1 |
| 40. | வழ. இல. இல்லை | இரும்பிலான கோவை அறை அலுமாரி (முற்றாக சேதமடைந்தது) | 1 |
| 41. | வழ. இல. இல்லை | சீலிங் பேன் (பழுதடைந்தது) | 5 |

9-508

# ஆய விற்பனையும் குத்தகையும்

## கட்டானை பிரதேச செயலாளர் பிரிவின் கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை - 2007

கீழ் தரப்பட்டிருக்கும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளில் 2007, சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் புளித்த கள்ளினை சில்லறையாக விற்கும் பிரத்தியேக உரிமையினை வழங்குவதற்கு 1982, ஒகத்து மாதம் 20 ஆந் திகதியுடைய 207 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விதிகளுக்கமைவாகவும் நடைமுறையிலுள்ள பொது விதிகளுக்கமைவாகவும் இங்கு கீழே குறிப்பிட்டுள்ள விதிகளுக் கமைவாகவும் கேள்விப்பத்திரங்கள் 2006.09.29 ஆந் திகதி மு.ப.10.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரக்காரரினால் எப்பிரதேச செயலாளர் அலுவலகத்திலுமுள்ள விண்ணப்பப்படிவத்தில் முறையாகத் தயாரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை இங்கு கீழுள்ள பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள நிரந்தர வைப்புப் பணத்தை செலுத்தியதற்காக பெறப்பட்ட பிரதேச அலுவலக பற்றுச்சீட்டுடன் கள்ளு விற்பனை நிபந்தனைகளுக்கமைவாகப் பெறப்பட்ட பெறுமதிச் சான்றுப் பத்திரத்துடன் பொறிக்கப்பட்டதும் இடது பக்க மூலையில் இங்கு பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் கேள்விப்பத்திரம் வழங்கப்படும். "தவறணையின் பெயரும் இலக்கமும்" தெளிவாகக் குறிப்பிடப்பட்டதுமான கடித உறையில் இட்டு மேற்படி கேள்விப்பத்திரங்களை இப்பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திர பெட்டியில் இடுதலோ அல்லது கட்டானை பிரதேச செயலாளருக்கு விலாசமிட்டு பதிவுத் தபால்மூலம் இங்கு பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் கடைசித்திகதிற்கு முன்னதாக அனுப்புதலோ வேண்டும்.

கேள்விப்பத்திரத்தில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள், திருத்தங்கள் எல்லாவற்றிற்கும் எதிரில் கேள்விப்பத்திரக்காரர் தமது ஒப்பத்தையிடுவதன் மூலம் அவற்றை உறுதி செய்தல் வேண்டும். இவ்வாறான தேவைகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.

கேள்விப்பத்திர முடிவுத் திகதியான 2006.09.29 ஆந் திகதியன்று முற்பகல் 10.30 மணிக்கு எல்லா கேள்விப்பத்திரதாரர்களும் கட்டானைப் பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

எந்தவொரு கேள்விப்பத்திரத்தையோ அல்லது எல்லாக் கேள்விப்பத்திரங்களையோ எவ்வித காரணங்களையும் காட்டாது நிராகரிக்கும் உரிமை பிரதேச செயலாளருக்குண்டு.

உரிய திகதியில் விற்பனை செய்ய இயலாத கள்ளுத்தவறணைகள் 2006.11.01 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்பனை செய்யப்படும். அன்றைய தினத்தில் கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்தல் இவ்வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவித்தல்களுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்கள் எவருடையது என்பதை அறிவித்தவுடன் அன்றைய தினம் பி. ப. 2.00 மணிக்கு முன்பதாக குத்தகையின் கேள்விப்பத்திரதாரர்கள் இரண்டு மாத வாடகைக்கு குறையாது தீர்மானிக்கப்படும் தொகையை பிணைப்பணமாக கட்டானை பிரதேச செயலாளருக்குச் செலுத்தி குத்தகை விற்பனைக்கான நிபந்தனைகளுக்கு ஒப்பமிடல் வேண்டும்.

மேலதிக விபரங்கள் தேவையானோர் அவற்றினை கட்டானை பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

டபிள்யு. ஏ. டீ. பி. லக்ஷ்மன்,
பிரதேச செயலாளர்,
கட்டானை.

பிரதேச செயலகம்,
கட்டானை,
தெமங்ஹந்திய.
2006.08.204

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | தவறணையின் பெயரும் இலக்கமும் | பிரிவு | தவறணை அமைந்துள்ள உள்ளூராட்சிப் பிரதேசம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | கேள்வி வைப்பு ரூபா | கேள்விப்பத்திரம் பொறுப்பேற்கும் இறுதித் திகதி யும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | மூக்கலன்கமுவை இல. 13 | கட்டானை | மூக்கலங்கமுவை கிராமத்தில் மட்டும் | மு. ப. 11.00 பி. ப. 5.00 | பி. ப. 2.00 பி. ப. 8.00 | 4,000 | 2006.09.29 மு. ப. 10.30 |
| 2. | கட்டுநாயக்க இல. 14 | கட்டானை | கட்டுநாயக்க கிராமத்தில் மட்டும் | மு. ப. 11.00 பி. ப. 5.00 | பி. ப. 2.00 பி. ப. 8.00 | 4,000 | 2006.09.29 மு. ப. 10.30 |
| 3. | ஆனகாலை இல. 23 | கட்டானை | ஆனகால கிராமத்தில் மட்டும் | மு. ப. 11.00 பி. ப. 5.00 | பி. ப. 2.00 பி. ப. 8.00 | 500 | 2006.09.29 மு. ப. 10.30 |
| 4. | கி. கட்டான இல. 24 | கட்டானை | கி. கட்டானை கிராமத்தில் மட்டும் | மு. ப. 11.00 பி. ப. 5.00 | பி. ப. 2.00 பி. ப. 8.00 | 2,000 | 2006.09.29 மு. ப. 10.30 |
| 5. | தெமன்ஹந்திய இல. 27 | கட்டானை | தெமன்ஹந்திய கிராமத்தில் மட்டும் | மு.ப. 11.00 பி. ப. 5.00 | பி. ப. 2.00 பி. ப. 8.00 | 2,000 | 2006.09.29 மு. ப. 10.30 |

9-534

---

## திவுலபிட்டி பிரதேச செயலகம்

*2007 சனவரி மாதம் 1 ஆந் திகதி முதல் 2007 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையுள்ள காலப்பகுதிக்குள் கள்ளுத் தவறணை விற்பனைக்கு விற்றல்-திவுலப்பிட்டிய பிரதேச செயலகம்*

2007, சனவரி மாதம் 1 ஆந் திகதி முதல் 2007, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையுள்ள காலத்தில் அத்துடன் இணைக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளில், குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் எற்றுக்கொள்ளப்படும். அனுமதிப்பத்திரங்கள் யாவும் தற்போது அமுலில் இருக்கும்போது நிபந்தனைகளுக்கு அமைவாகவும், 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் இருத்தல் வேண்டும்.

2. ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விபரங்களுக்கமைய வைப்புப் பணமாக பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டும், விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சிச் சான்றிதழும் இணைக்கப்படுதல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் முறையாக மெழுகிடப்பட்ட உறையிலிட்டு இடதுபக்க மேல் மூலையில் தவறணையின் இலக்கத்தையும் பெயரையும் "............................................இலக்க..............................கள்ளுத்தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" எனக்குறிப்பிடல் வேண்டும். கள்ளுத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம் 2006.10.02 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக திவுலபிட்டிய பிரதேச

செயலாளருக்கு பதிவு தபாலில் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும் அல்லது மேற்குறிப்பிட்ட காலத்துள் திவுலபிட்டிய பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரங்கள் பெட்டியினுள் இடப்படுதல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982.08.20 ஆம் திகதி கொண்ட 207 ஆம் இலக்க இலங்கை சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகள் குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

5. 2006.10.02 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனேயே கேள்விப்பத்திரங்கள் யாவும் திறக்கப்படும். அச்சமயம் கேள்விப்பத்திரக்காரர்கள் திவுலபிட்டிய பிரதேச செயலகத்துக்கு சமுகமளித்தல் வேண்டும்.

6. குறிப்பிட்ட தினத்தில் விற்பனை தவறும் தவறணைகள் 2006.11.02 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு விற்பனையாகும். அப்பொழுது ஏற்றுகொள்ளப்படும் கேள்விப்பத்திரங்களும் வர்த்தமானியின் நிபந்தனைகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

7. இது சம்பந்தமான மேலதிக விபரங்களை திவுலபிட்டிய பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

யு. ஏ. எச். பெரேரா,
பிரதேச செயலாளர்,
திவுலபிட்டிய.

பிரதேசச் செயலகம்,
திவுலபிட்டிய,
2006.08.28

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | தவறணையின் பெயரும் இலக்கமும் | பிரிவு | கிராமம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா | கேள்விப்பத்திரம் பொறுப்பேற்கும் இறுதித் திகதி யும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 27-தாகொன்ன இல. 1 | திவுலபிட்டிய | தாகொந்த | மு. ப. 11.00<br>பி. ப. 5.00 | பி. ப. 2.00<br>பி. ப. 8.00 | 4,000 | 2006.10.02<br>மு. ப. 10.30 |

9-572

---

## நாரம்மல பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை - 2007

2007, சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் 2007, திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின் கள்ளுத்தவறணையை சில்லறைக்கு கள்ளு விற்கும் பூரண அதிகாரத்தை வழங்குவதற்கு 1982, ஓகத்து 20 ஆந் திகதி இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் 207 ஆம் இலக்க வர்த்தமானியில் உரிய ஆணையாளரினால் விளம்பரப்படுத்தப்பட்ட சில்லறைக்கு கள்ளு விற்கும் சட்டங்களுக்கமைய 2006, ஒற்றோபர் 05 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரையில் பிரதேச செயலாளரினால் கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கள்ளுக் குத்தகை வாங்க முன் வருபவர் சகல பிரதேச செயலகத்திலும் பெற்றுக் கொள்ளக்கூடிய உரிய கேள்விப்பத்திரத்தை முறையே பூர்த்தி செய்து அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் வைப்புப் பணத்தை இவ்வலுவலகத்திற்கோ, பிரதேச செயலகத்திற்கோ செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை, மேல் குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலின்படி கள்ளு விற்கும் சட்டங்களுக்கமைய பெற்றுக் கொண்ட பெறுமதிச் சான்றிதழுடன் கடித உறையிலிட்டு முத்திரை ஒட்டி, இடப்பக்க மேல் மூலையில் தான் விலைக்கோரும் தவறணையின் பெயரையும் இலக்கத்தையும், தெளிவாகக் குறிப்பிட்டு அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கடைசி நேரத்திற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்பவோ இப்பிராந்திய செயலகத்தில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் இடுவதன் மூலமோ பிரதேச செயலாளருக்கு கிடைக்க வழிவகுக்கலாம்.

3. கேள்விப்பத்திரம் நிரப்பும்போதுண்டாகும் சகல திருத்தங்களும் கேள்வியாளரினால் கையொப்ப மிட்டு அத்தாட்சிப்படுத்த வேண்டும். இப்படியில்லாத கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

4. கேள்விப்பத்திரம் ஏற்கப்படும் கடைசித் திகதியான 2006, ஒற்றோபர் 05 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு சகல கேள்வியாட்களும் பிரதேச அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

5. எதுவித ஆட்சேபனையுமின்றி ஒரு கேள்விப்பத்திரத்தையோ எல்லாப் பத்திரங்களையுமோ நிராகரிக்கும் பொறுப்பு நாரம்மல பிரதேச அலுவலகத்தை சார்ந்ததாகும்.

6. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டவர் என விளம்பரப்படுத்திய பிறகு அதற்குரித்தானவர் அத்திகதி பி. ப. 3.00 மணிக்கு முன் நாரம்மல பிரதேச செயலாளர் கூறும் தொகையை வைப்புப் பணமாகச் செலுத்தி வியாபார நியதிகளுக்கு கைச்சாத்திட வேண்டும்.

7. 2007 ஆம் வருடத்திற்காக தற்போது கள்ளுத்தவறணை உள்ள இடங்கள், தரப்படும் என உறுதி தரப்படமாட்டாது. தற்போதைய நிலையங்கள் 2007 வருடத்திற்காக பெற்றுக்கொள்ளப்படாவிடின் அதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையம் தகுந்தது என கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் நாரம்மல பிரதேச செயலாளரின் அனுமதியை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

8. 2006.10.05 ஆந் திகதி தகுந்த ஆய விற்பனைக்கு தகுந்த கேள்வி இல்லாதவிடத்து 2006.11.07 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மறு ஆய விற்பனை இதே இடத்தில் நடைபெறும்.

9. மேலதிக விபரங்களை இப்பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எல். எச். நம்யசிரி,
பிரதேச செயலாளர்,
நாரம்மல.

நாரம்மல பிரதேச செயலகம்,
2006.08.28.

**அட்டவணை**

| தொடர் இல. | பகுதி | கேள்விப் பத்திரம் ஏற்க்கப்படும் கடைசித் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திர வைப்புப்பணம் ரூபா | தவணை திறக்கும் நேரம் | தவணை மூடவேண்டிய நேரம் |
|---|---|---|---|---|---|
| 01 | நாரம்மல | 2006.10.05<br>மு. ப. 10.30 | 1,000 | மு.ப. 11.00<br>பி.ப. 5.00 | பி.ப. 2.00<br>பி.ப. 8.00 |

9-612

---

## ஹம்பாந்தோட்டை மாவட்ட எல்லைக்குள் இருக்கும் கள்ளுத் தவறணை குத்தகை - 2007

ஹம்பாந்தோட்டை மாவட்ட எல்லைக்குள் இருக்கும் முதலாம் இலக்க கள்ளுத்தவறணையில் 2007 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதலாந் திகதி தொடக்கம் 2007 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையில் சில்லறையாக கள்ளு விற்கும் உரிமை வழங்குவதற்காக நடைமுறையில் இருந்து வரும் விதிகளுக்கு அமையவும் 1982, ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக குடியரசின் வர்த்தமானப் பத்திரிகைக்கு அமையவும் கேள்விகள் கோரப்படுகின்றன.

2. கேள்விப்பத்திர வைப்புப் பணமாக 5,000 ரூபாவை எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டுடன் முறையாகத் தயாரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

3. ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் தமது சொந்தப் பெயரில் இருக்க வேண்டும். முகவர்கள் அல்லது இலங்கைப் பிரசைகள் அல்லாதவரின் மூலமாகவோ அல்லது 1982.08.20 ஆந் திகதிய அரச வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிட்டுள்ள 1982 ஆம் ஆண்டின் கள்ளுத் தவறணைக் குத்தகை சட்டங்களுக்கு அமைய அருகதையற்றவர்களின் கேள்விப்பத்திரம் அனுமதிக்கப்படமாட்டாது.

4. ஒருவர் ஒரு கேள்விப்பத்திரத்திற்கு அதிகமாகவோ அல்லது 5 பேர் சேர்ந்தோ அத்தவறணைக்கான கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கப்படலாகாது.

5. ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் "ஹம்பாந்தோட்டை 1 ஆம் இலக்க கள்ளுத் தவறணைக்கான கேள்விப் பத்திரம் - 2007" என தபால் உறையின் மேல் மூலையில் எழுதப்பட்டு பிரதேசச் செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் சேர்க்கப்பட்டோ அல்லது தபாலிலோ 2006.09.29 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு முன்பாக அம்பாந்தோட்டை பிரதேச செயலாளருக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். கேள்விப்பத்திரம் கோருபவர்கள் அவைகள் மூடப்படும் நேரத்தில் அம்பாந்தோட்டை பிரதேசச் செயலாளர் அலுவலகத்திற்குச் சமுகமளிக்க வேண்டும்.

6. தெரிவுசெய்யப்பட்ட கேள்வியாளர்கள் யார் என்பதை அறிந்ததும் அவர் ஒப்பந்த விற்பனை விதிகள் அடங்கிய கேள்விப்பத்திரத்தில் கைச்சாத்திட்டு ஹம்பாந்தோட்டை பிரதேச செயலாளரினால் குறிக்கப்படும் பணத்தைப் பிணைப் பணமாகக் கட்ட வேண்டும்.

7. ஒரு கேள்விப்பத்திரத்தையோ அல்லது எல்லாக் கேள்விப்பத்திரங்களையோ ஏற்கவோ அல்லது மறுக்கவோ ஹம்பாந்தோட்டை பிரதேச செயலாளருக்கு உரிமை உண்டு.

8. இவ்வறிவித்தலில் குறிப்பிட்டுள்ள கேள்விப்பத்திரம் முடியும் திகதி 2006.09.29 மாற்றப்பட்டால் மறுபடியும் கேள்விப்பத்திரம் முடியும் திகதி 2006.10.16 எனக் கருதப்படல் வேண்டும்.

9. மேலதிக விபரங்களுக்கு ஹம்பாந்தோட்டை பிரதேச செயலாளர் அவர்களிடம் விண்ணப்பித்து தெரிந்து கொள்ளலாம்.

டி. எஸ். பத்மகுலசூரிய,
பிரதேசச் செயலாளர்,

ஹம்பாந்தோட்டை.
பிரதேச செயலாளர் அலுவலகம்,
ஹம்பாந்தோட்டை
07.08.2006.

**அட்டவணை**

***ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் அனுமதிக்கப்பட்ட கள்ளுத்தவறணை - 2006***

| கள்ளுத் தவறணை | பிரிவு | எல்லை | கேள்விப் பத்திரம் முடியும் திகதி | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் |
|---|---|---|---|---|---|
| 01 | ஹம்பாந்தோட்டை | ஹம்பாந்தோட்டை | 2006.09.29<br>மு.ப. 10.00 | மு.ப. 11.00<br>பி.ப. 5.00 | பி.ப. 2.00<br>பி.ப. 8.00 |

9-611

---

## லுணுகல பிரதேச செயலகப் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை -2007

2007, சனவரி மாதம் 1 ஆம் திகதி முதல் 2007, திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில், கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள லுனுகலை பிரதேச செயலாளரின் பிரிவில், புளித்த கள்ளினை சில்லறை விலைக்கு விற்பனை செய்வதற்கான பிரத்தியேக உரித்தின் குத்தகையினை கொள்வனவு செய்வதற்கான 1982, ஓகத்து 20 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் இலக்கம் 207 கொண்ட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட புளித்த கள்ளினை விற்பனை செய்வதற்கான நிபந்தனைகளுக்கமைவாக 2006.10.20 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரையில் கேள்விப்பத்திரங்கள் என்னால் கோரப்படுகின்றன.

2. குத்தகையினை பெற்றுக்கொள்ள முன்வருபவர்கள் இலங்கையினுள் அமைந்துள்ள எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ளத்தக்கதான குறித்த விண்ணப்பப்படிவத்தினை முறைப்படி பூர்த்தி செய்து, இங்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட கள்ளுத் தவறணை அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பத்திரக் கட்டணத்தினைச் செலுத்தி, பெற்றுக்கொள்ளப்பட்ட வருமான சான்றுப்பத்திரத்துடன் பெயரிடப்பட்டுள்ள கடிதக் கூட்டினுள் இட்டு, கடிதக் கூட்டின் மேல் இடதுபக்க மூலையில், கேள்விப்பத்திரம் கோரப்பட்டுள்ள தவறணையின் இலக்கத்தினையும், பெயரினையும் தெளிவாகக் குறிப்பிட்டு அந்தத்தவறணைக்காகவென இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இறுதி நேரத்திற்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பவோ அல்லது பிரதேச செயலாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடுவதன் மூலம் லுனுகலை பிரதேச செயலாளருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரக்காரர்கள் கேள்விப்பத்திரப் படிவங்களை பூரணப்படுத்தும்போது கேள்விப்பத்திர படிவத்தில் செய்கின்ற அனைத்து மாற்றங்களையும் தனது பூரண ஒப்பத்தை இட்டு உறுதிப்படுத்துதல் வேண்டும். அவ்வாறு செய்யப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

4. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதி நாளாகிய 2006.10.20 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அனைத்து கேள்விதாரர்களும் இந்த பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு சமூகமளித்திருத்தல் வேண்டும்.

5. ஏதேனும் விடயமொன்றினைக் குறிப்பிட்டிராத கேள்விப்பத்திரமொன்றினையோ அல்லது அனைத்து கேள்விப்பத்திரங்களையும் நிராகரிக்கும் அதிகாரம் லுனுகலை பிரதேச செயலாளருக்குண்டு.

6. முன் குறிப்பிட்ட தினத்தில் குத்தகை விற்பனை செய்யப்படாதவிடத்து அதனை மீண்டும் விற்பனை செய்தல் 2006.11.21 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு நடைபெறும். அதற்கான கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்தல் இந்த வர்த்தமானி அறிவித்தலின் தேவைகளுக்கமைவாயிருத்தல் வேண்டும்.

7. ஒருவர் ஆய உரித்தினை பெற்றுக் கொண்டார் எனப் பிரகடனப்படுத்தப்படின், அவ்வாறு பிரகடனப்படுத்தப்பட்ட தினம் பி. ப. 2.00 மணிக்கு முன்பதாக அவர் லுனுகலை பிரதேச செயலாளரினால் விதிக்கப்படுகின்ற தொகையாகிய, இரண்டு மாதக் கட்டணத்திற்குக் கூடுதலான தொகையினை வைப்பாக என்னிடம் செலுத்தி, தவறணை பற்றிய நிபந்தனைகளுக்கு ஒப்பமிடுதல் வேண்டும்.

8. கேள்விப்பத்திரம் சமர்ப்பித்தல் சம்பந்தமாக தெரிந்து கொள்ள வேண்டிய வேறு விபரங்களை லுனுகலை பிரதேச செயலாளரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பீ. எஸ். பீ. அபேவர்தன,
பிரதேச செயலாளர்,
லுணுகலை.

பிரதேச செயலாளர் அலவலகம்,
லுணுகலை.
2006.08.23

**அட்டவணை**

**லுணுகலை பிரதேச செயலகத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகள்**
**(2007.01.01 ஆந் திகதி தொடக்கம் 2007.12.31 ஆந் திகதி வரை)**

| தொடர் இல. | தவறணையின் பெயரும் இலக்கமும் | பிரிவு | பி. செ. பிரிவும் தவறணையின் அமைவிடமும் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | கேள்வி வைப்புத் தொகை ரூபா | கேள்விப் பத்திரங்களை ஏற்றுக் கொள்ளப்படுகின்ற கடைசி திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | இல. 02-லுணுகலை | லுணுகலை | பசறை பிரதேச சபையின் லுணுகலை உப அலுவலகத்தின் 2 ஆம் இலக்க வட்டாரத்தில் வரிமதிப்பீட்டு இலக்கம் 219 ஐக் கொண்ட, குரவிகும்புர தோட்டம் | மு. ப. 11.00<br>பி. ப. 5.00 | பி. ப. 2.00<br>பி. ப. 8.00 | ரூபா. 5,000 | 2006.10.20<br>மு. ப. 10.30 |

மாஹதோவை தோட்ட எல்லைக்குள், இரவு நேர சிற்றுண்டிச்சாலைக்கு 2007 ஆம் வருடத்திற்காக அனுமதிப்பத்திரத்தினை புதுப்பிப்பது தொடர்பான சிபாரிசினை, தோட்ட அதிகாரி 2006.10.20 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக லுணுகலை பிரதேச செயலாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

9-632

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அட்டர்னி தத்துவப்பத்திரம் இரத்துச் செய்தல்

இராஜகிரிய, ஒபேசேகரபுர, மொரகஸ்முல்ல வீதியில் இல. 215/4 இல் உள்ள பிரஹக்மனகம அல்விட்டிகலகே சிரியலதா ஆகிய நான், இராஜகிரிய, ஒபேசேகரபுர, ஸ்கந்த தேவால மாவத்தையில் இல. 7/27 இல் உள்ள மாலிகொடை, பதிரணகே தீபிகா பிரியந்தி என்பவருக்கு பிரசித்திபெற்ற நொத்தாரிசு எஸ். சந்திரா சில்வா என்பவரால் 1999.11.01 ஆம் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 4354 ஆம் இலக்கம் கொண்ட அட்டர்னி தத்துவப்பத்திர மூலமாக கொடுக்கப்பட்ட சகல அதிகாரங்களையும் இரத்துச் செய்கிறேன் என்று இலங்கையின் அரசாங்கத்திற்கும், சகல பொது மக்களுக்கும் இதன் மூலமாக அறிவிக்கிறேன்.

பிரஹக்மனகம அல்விட்டிகலகே சிரியலதா.

9-533

### நொத்தாரிசு இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுதல் தொடர்பான அறிவித்தல்

அம்பாறை மாவட்டம், பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவின் பொத்துவில், 2 ஆம் குறிச்சி, அகடெமி வீதியில் வசிக்கும் பைக்கீர் முகைதீன் மீராலெவ்வை ஆகிய நான், நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம் அத்தியாயம் 107 (தற்போது அத்தியாயம் 110) முதலாவது அட்டவணையில் 'ஆ' பகுதியின் இரண்டாம் பிரிவின் ஏற்பாடு களுக்கமைவாக இவ்வருடம் திசெம்பரில் நடைபெறவுள்ள நொத்தாரிசு இறுதிப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காகவும், அதன் பலனாக தமிழ் மொழியில் நொத்தாரிசாக தெரிவாவதற்காகவும் அனுமதி பெறுவதற்காக பதிவாளர் நாயகத்திற்கு விண்ணப்பமொன்று செய்யவுள்ளேன் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

பை. மு. மீராலெவ்வை,
அகடெமி வீதி,
பொத்துவில்.

9-553

---

### நொத்தாரிசு இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுதல் தொடர்பான அறிவித்தல்

அம்பாறை மாவட்டம், அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 16, முதலாம் குறுக்குத் தெரு, அக்கரைப்பற்று - 10 எனும் விலாசத்தில் வதியும் ஆதம் லெவ்வை முகம்மது ஸக்கரியா ஆகிய நான், (தேசிய அடையாள அட்டை இலக்கம்- 512602517 V) நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 107) (தற்போது அத்தியாயம் 110) இன் முதலாவது அட்டவணையின் 'ஆ' பகுதியின் இரண்டாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக இவ்வருட இறுதியில் நடைபெற இருக்கும் நொத்தாரிசு இறுதிப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காகவும், அதன் பலனாக தமிழ் மொழி மூல நொத்தாரிசாக தெரிவாவதற்காகவும் அனுமதி பெறுவதற்காக பதிவாளர் நாயகத்திற்கு விண்ணப்பமொன்று செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

ஏ. எல். எம். ஸக்கரிய்யா,

16, முதலாம் குறுக்குத் தெரு,
அக்கரைப்பற்று 10.

9-554

---

### அற்றோனித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 92/1B, போதியங்கன மாவத்தை, போவெல, கண்டி என்ற முகவரியில் வசிக்கும் ஷிரானி மல்காந்தி பெரேரா விக்கிரமசிங்க ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு யு. ஏ. பிரேமசுந்தர என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 2004 ஆம் ஆண்டு ஆனி மாதம் 10 ஆந் திகதியிடப்பட்ட 2246 ஆம் இலக்கமிடப்பட்ட அற்றோனித் தத்துவப் பத்திரம் மூலம் இல. 15, வீரசேகர மாவத்தை, தலவதுகொட என்ற முகவரியில் வசிக்கும் உபாலி லியனகே என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோனித் தத்துவப் பத்திரத்தை இரத்துச் செய்வதுடன் இது இனிமேல் செல்லுபடியாகாது என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

மேற்குறித்த உபாலி லியனகே என்பவரால் மேற்கொள்ளப்படும் எதுவித நடவடிக்கைக்கும் இனிமேல் பொறுப்பாளியாக மாட்டேன் என்றும் இத்தால் அறிவிக்கின்றேன்.

ஷிரானி மல்காந்தி பெரேரா விக்கிரமசிங்க.

9-588

---

## ஏல விற்பனைகள்

### தேசிய சேமிப்பு வங்கி

1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13ஆம் பிரவின் நியதிகளின் கீழான விற்பனை

**தேசிய சேமிப்பு வங்கிக்கு சொந்தமான ஆதனத்தின் ஏல விற்பனை**

**மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியன்னே கோறளை மெதபத்து கம்பஹா பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பரகந்தெனிய கிராமத்தில் அமைந்துள்ள பரகந்தெனிய எஸ்டேட் என அழைக்கப்படும் காணியின் துண்டு 60 எனக் காட்டப்படும் 12.81 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ள பெறுமதிமிக்க ஆதனத்தின் ஏல விற்பனை**

*(இல. 345, மூனமல்கஹவத்த வீதி, பொல்ஹேன, களனியை முகவரியைக் கொண்ட திரு. எச். ஏ. எஸ். பி. நெய்ள் என்பவரால் இவ் ஆதனம் 'தேசேவ' இல் ஈடுவைக்கப்பட்டது.)*

**ஆதனத்தின் விபரம்.**- கம்பஹா மாவட்டம், சியன்னே கோறளையின் மெதபத்து பரகந்தெனிய கிராமத்தில் அமைந்துள்ள கொரகஹலந்த, வெரலுகஹலந்த, தெல்கஹவத்த என்றும் கொங்கஹவத்த மற்றும் மில்லகஹவத்த என்பவற்றைக் கொண்ட பரகந்தெனிய எஸ்டேட் என அழைக்கப்படும் காணியும் அதில் நிற்கும் சகலதும் உள்ளடங்கலாகவும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. டீ. ஜீ. வீரசிங்கவினால் ஆக்கப்பட்ட 1996, யூலை 15 ஆந் திகதியிட்ட 1060 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட துண்டு 60 என அடையாளமிடப்பட்டதும் வடக்கில் : துண்டு 140 ஐயும் ; கிழக்கில் : துண்டு 61ஐயும் ; தெற்கில் : துண்டு பி, பரகந்தெனிய எஸ்டேட்டின் (ஒரு பகுதி) யையும் ; மேற்கில் : துண்டு 59ஐயும் எல்லைகளாகக் கொண்டதும் பன்னிரெண்டு தசம் எட்டு ஒன்று பேர்ச்சஸ் (0ஏ. 0று. 12.81பே.) அல்லது 0.0324 ஹெக்டேயர் விஸ்தீரணமுள்ளதுமான பிரித்து வரையறுத்த காணித் துண்டு முழுவதும். இக் காணி கம்பஹா காணிப்பதிவகத்தில் வல்யூம்/ கோவை ஈ 562/153 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்ட 1060 ஆம் இலக்க வரைபடத்தின் துண்டு 140இன் மேலாகவும் செல்வதற்கான பாதை உரித்தும் உள்ளடங்கலாக சொல்லப்பட்ட துண்டு 60உம் துண்டு 140உம் அதன் கீழ் விபரிக்கப் படும் காணியின் பிரித்து வரையறுக்கப்பட்டவையாகும்.

**ஆதனத்திற்கு செல்லும் வழி.**- கொழும்பு கண்டி பாதையில் இம்புல்கொட கொக்கிஸ் கடை சந்தி வரை செல்லவும். இடது பக்கமாக கனேமுல்ல வீதியில் திரும்பி 2 கி. மீ. தூரம் வரை தொடர்ந்து செல்லவும். பின்னர் 'நெதும் உயன' விற்குச் செல்வதற்கு இடது பக்கமாக ஒதுக்கப்பட்ட பாதையில் 225 மீட்டர் வரை சென்று சம்பந்தப்பட்ட ஆதனத்தை (துண்டு 60) அடையவும்.

இவ்வாதனம், பகிரங்க ஏல மூலம் 2006 ஒற்றோபர் 05 ஆந் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அதில் நிற்கும் சகலதும் உள்ளடங்கலாக அதே இடத்தில் விற்கப்படும்.

**கொடுப்பனவு செய்யப்படும் விதம்.**- ஏலத்தைப் பெற்ற கொள்வனவுகாரர் விற்பனை முடிந்தவுடன் பின்வரும் தொகைகளை ஒவ்வொரு ஆதனத்தின் பேரிலும் காசாகக் கொடுக்க வேண்டும் :-

1. கொள்வனவு விலையின் 25% ;
2. பிரதேச சபைக்கு வரியாகக் கொள்வனவு விலையின் 1% ;
3. ஏலதாரர் தரகாக கொள்வனவு விலையின் 2 1/2% (இரண்டரை வீதம் மட்டும்) ;
4. விளம்பரச் செலவு ரூபா 50,000 ;
5. எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுபவரின் கட்டணமாக ரூபா 500 ;
6. விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்துவதற்காக நொத்தாரிசுக் கட்டணமாக ரூபா 300.

கொள்வனவு விலையின் மீதி 75% விற்பனைத் திகதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள்ளாக வங்கிக்கு செலுத்தப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களையும் விற்பனை நிபந்தனைகளையும் பெறுவதற்கு தொடர்பு கொள்ள வேண்டியவர். உதவிப் பொது முகாமையாளர் (கடன்), தேசிய சேமிப்பு வங்கி, இல. 255, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 2576132

சொக்மன் அன்ட் சமரவிக்கிரம
பட்டய ஏலதாரர்களும்,
இலங்கையின் அரச தனியார்துறை
வங்கிகளதும் மதிப்பீட்டாளர்களும்,
நீதிமன்ற தரகர்களும்

*நகர அலுவலகம் :*
55ஏ தர்மபால மாவத்தை
கொழும்பு 3
தொலைபேசி 011- 2448526, 011-2441761, 074-714999
தொலை நகல்: 011-2448526
மின் அஞ்சல்: samera@srilanka.net.

*தலைமை அலுவலகம் :*
24, டொறிங்ரன் வீதி,
கண்டி
தொலைபேசி 081-2224371, 081- 2227593
தொலை நகல் 081-2224371
மின் அஞ்சல்: samera@diamond.lanka.net.

9-595

**கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்**

மஹரகம கிளை மூலம் பகிரங்க ஏல விற்பனை

